**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.244./2022 –** P.W.1

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு.மணவாளன் | Father's Name. சக்கரைதேவர் |
| Village : அந்தணப்பேட்டை | Age: 56 |
| Date :13.05.2026 | தொழில் : ஸ்வீட் கடை |

நம்பர்: 7639614972

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th day of May 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th day of May 2026.**

Signature of Interpreter

**( எதிரிகள் ஆஜர் )**

**கூடுதலாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்ட 7 மற்றும் 8 ஆகிய எதிரிகளை பொறுத்து, அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் அந்தணப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் நாகப்பட்டினம் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் ஸ்வீட் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 19.10.2021 ஆம் தேதி என்னையும், எனது மகன் மணிபிரகாசையும் எதிரிகள் அடித்து காயப்படுத்திய பிரச்சினை சம்பந்தமாக நான் ஏற்கனவே கடந்த 25.09.2023 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம்

அளித்தேன். அப்போது இவ்வழக்கானது 1 முதல் 6 வரையிலான எதிரிகளுக்கு எதிராகவே இருந்தது. எனது சாட்சியத்தின் அடிப்படையில் தற்போது 7 மற்றும் 8 ஆகிய எதிரிகளை இவ்வழக்கில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவ சமயத்தில் ஆஜர் 7 வது எதிரி சந்தோஷ் குமார் , 8 வது எதிரி தனுஷ் ஆகிய இருவரும் எனது கடையில் வலது புறத்தில் இருந்து ஓடி வந்து, என்னையும், எனது மகன் மணிபிரகாஷையும் அந்த இடத்திலிருந்து ஓடவிடாமல் பிடித்து கொண்டார்கள். அப்போது, 2 ஆம் எதிரி விஜயகுமார், 6 வது எதிரி சதீஷ், 1 ஆம் எதிரி சுதந்திரராஜா ஆகியோர்கள் என்னை பிடித்து, அடித்து கீழே தள்ளினார்கள். பிறகு 2வது எதிரி விஜய குமார், தான் மறைத்து வைத்திருந்த பட்டாகத்தியை எடுத்து, எனது தலையில் வெட்ட முற்பட்டார். அப்போது நான் தடுத்த போது, எனது இடது உள்ளங்கையில் இரண்டு முறை வெட்டு பட்டது என சாட்சி சாட்சியம் அளித்து, தனது இடது உள்ளங்கையில் உள்ள பழைய காயத்தழும்புகளை காட்டுகிறார். மூன்றாவது முறையாக என்னை எதிரி விஜயகுமார் என்னை வெட்டிய போது, இடது தலையிலும், இடது தோள்பட்டையிலும் வெட்டு காயம் ஏற்பட்டது. என்னை வெட்ட வந்த போது, தடுக்க வந்த எனது மகன் மணிபிரகாஷை 1வது எதிரி சுதந்திரராஜா கத்தியால் எனது மகனின் முன்தலையில் வெட்டி விட்டார். மூன்று முறை எனது மகனின் வலது கையில் வெட்டு விழுந்தது.

**எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் புதிதாக சேர்க்கப்பட்ட 7 மற்றும் 8 ஆம் எதிரிகளுக்கு மட்டுமின்றி 1 முதல் 6 வரையிலான எதிரிகளுக்கும் தான்தான் ஆஜராகுவதாகவும், ஏற்கனவே இந்த சாட்சியை அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்த போது, 1 முதல் 6 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்றும், தற்போது அவர்களுக்காகவும் சேர்த்து குவிமுச 311 ன் படி குறுக்கு**

**விசாரணை செய்யும் படி மனுதாக்கல் செய்து வேண்டினார்,. மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் 1 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்த பின்னர் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேனா என்றால் ஆமாம். அங்கிருந்து உடனடியாக மேற் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் என்ற தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். போலிசார் தகவல் அறிந்து, தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலங்கள் பதிவு செய்தார்கள். போலிசார் என்னை எத்தனை முறை விசாரணை செய்தார்கள் என்றால் மூன்று முறை விசாரணை செய்தார்கள். பின்னிட்டு சாட்சி அவராகவே நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்த பொழுது ஒரு முறை வந்து விசாரணை செய்தார்கள், அப்போது நான் மயக்கநிலையில் இருந்தேன். தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் என்னை வந்து போலிசார் வந்து பார்த்தார்கள், ஆனால் விசாரிக்கவில்லை. என்னை தஞ்சாவூர் வினோதன் என்ற மருத்துவமனையில் வைத்து தான் ஒரு முறை விசாரணை செய்தார் என்று சாட்சியம் அளிக்கிறார்.

என்னை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தபோது, அங்கு எனக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் எப்படி காயம் ஏற்பட்டது என்பதை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொன்னதை மருத்துவர் பதிவு செய்து கொண்டு, வழங்கிய விபத்து பதிவேடு ஆவணம் தான் தற்போது காட்டப்படுவது என்று சொன்னால் சரிதான். அந்த விபத்து பதிவேடு ஆவணத்தில் என்னை கடந்த 19.10.2021 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு ஆறு தெரிந்த நபர்கள் நாகை புதிய பேரூந்து நிலையத்தில் அருவாள் , பட்டா கத்தி ஆகியவைகளை வைத்து தாக்கியதாக

எனக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் நான் கூறியதாக கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பேலிசார் என்னை விசாரணை செய்து பதிவு செய்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ–1 ஆன புகார் வாக்குமூலத்தில் கடந்த 19.10.2021 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் நானும், எனது மகன் ரவிபிரகாசும் ஸ்வீட் கடையில் இருக்கும் போது பஞ்சவர்ணம், அவளது மகள் கலைவாணி, எனது மற்றொரு அக்கா ராணி, அவர்களது தூண்டுதலின் பேரில் பஞ்சவர்ணத்தின் மகன் மொட்டை ராஜா என்கின்ற சுதந்திரராஜா , ராணியின் மகன் விஜயகுமார், மற்றும் அடையாளம் தெரிந்த இருவர் என மொத்தம் ஏழு பேர் தான் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏழாம் எதிரி சந்தோஷ் குமார் யார் என்றால் எனது அக்கா ராணியின் இளைய மகன், 8 ஆம் எதிரி தனுஷ் யார் என்றால் எனது அக்கா பஞ்சவர்ணத்தின் மகளான நான்காம் எதிரி கலைவாணியின் மகன். அதனால் எனக்கு அவர்கள் இருவரையும் நன்கு தெரியும். அவ்வாறு இருந்தும் அவர்கள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக நான் சுயநினைவோடு அளித்த புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் முதன்முதலாக 7, 8 ஆகிய எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தில் தான் சாட்சியமாக அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். 6 ஆம் எதிரி சதீஸ் நீங்கலாக, இதர அனைத்து எதிரிகளும் எனது நெருங்கிய உறவினர்களான எனது அக்காக்கள், அக்கா மகள், அக்கா மகன்கள், அக்கா மகளின் மகன் என்று சொன்னால் சரிதான். எதிரிகளான 3 வது எதிரி பஞ்சவர்ணம், 4வது எதிரி கலைவாணி, 5 வது எதிரி ராணி ஆகியோர்கள் சம்பவ சமயத்தில், சம்பவ இடத்தில் இருந்தாக நான் அளித்த அசாஆ–1 ஆன புகார் வாக்குமூலத்திலும், எனது குவிமுச 161 (3) படியான வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அவர்கள் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திற்கு வரவில்லை. 6ஆம் எதிரி சதீஷ்யும்

இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக அவரது பெயர் குறிப்பிட்டு அசாஆ–1 புகார் வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நிலையில், அவர்கள் யார் என்று உறுதிப்படுத்திகொள்ள என் மூலம் போலிசார் ஏதாவது அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை.

நானும், எனது மகனும் எதிரிகள் ராணி மற்றும் பஞ்சவர்ணம் ஆகியோர்களை தாக்கியதாக இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பாக வெளிப்பாளையம் காவல்நிலைய குற்ற எண் 969/2021 மற்றும் குற்ற எண் 819/2021 என்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குற்ற வழக்குகள் நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் தற்போது விசாரணையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த குற்ற வழக்குகள் சம்பவமும், இந்த குற்ற வழக்குகள் சம்பவமும் ஒரே சமயத்தில் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல.

நான் வைத்துள்ளதாக சொல்லப்படும் ஸ்வீட் கடையானது எனது அம்மா பெயரில் நாகப்பட்டினம் நகராட்சியால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த கடையை நான் எனது தாயாரிடமிருந்து அபகரிப்பதாக சொல்லி எனது பெயரில் எனது தாயார் நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் எனது தாயாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். சம்பவ சமயத்தில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் இரண்டு கத்திகளும் பட்டாகத்திகள் தான், அதை போலிசாரிடம் யார் எடுத்து ஆஜர் செய்தது என்றால் எனது பக்கத்து கடையை சேர்ந்த முத்துக்குமார் என்பவர் தான் எடுத்து ஆஜர் செய்தார்.

சம்பவ சமயத்தில் 8 ம் எதிரி தனுஷின் வயது 17 என்று சொன்னால் சரியல்ல. அவரது வயது என்ன என்று தெரியுமா என்றால் வெளியூரில் கல்லூரி படித்து வந்தார் , அதனால் அவரது குறிப்பிட்ட வயது தெரியாது. எனது தாயார் இறந்த பின்னிட்டு தான் கடை சம்பந்தமாக எனக்கும் எனது சகோதரிகளுக்கும் பிரச்சினை ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட தினந்தன்று நானும் எனது மகனும் , 5ஆம் எதிரி ராணியை அடித்தி காயப்படுத்தியால் அவர் அன்று மருத்துவமனையில் உளநோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் மணிபிரகாசுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் கடந்த வருடம்தான் ஆனது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடைக்கு அருகே நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் பாதை உள்ளது என்று சொன்னால் சரிதான். 5, 6 கடைகள் தள்ளியுள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவது இரவு 10.30 மணி என்று சொன்னால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்பட்ட அன்று இரவு 10.30 மணியளவில் பேருந்து நிலையில் இருந்த பெண்ணிடம் எனது மகன்தான் காமகுரோதமான செயல்களில் ஈடுபட்டார் என்றும், அதனால் அங்கு இருந்த கடைக்காரர்கள்தான் எங்களை அடித்து காயப்படுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே எங்களுக்கும் , எதிரிகளுக்கும் இருந்த கடை பிரச்சினை காரணமாகவும், எங்கள் பெயரில் ஏற்கனவே குற்ற வழக்குகள் இருந்ததாலும், எதிரிகள் மீது உண்மைக்கு புறம்பான பொய்புகாரினை கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சி அளித்தது போல, சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் மீது முன்விரோதம் காரணமாக தவறான புகாரினை கொடுத்துவிட்டு, அதற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

உண்மையை சொல்லி புகார் கொடுத்தால், எனது மகனின் திருமண

வாழ்க்கை பாதிக்கும் என்பதற்காக அதை மறைத்து, தவறான புகாரினை கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் அனைத்தும் வேறு வகையில் ஏற்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரிகளின் குடும்பத்தை பழி வாங்க வேண்டும் என்பதற்காக பொய்யான புகார் கொடுத்து, இளவர் நபரையும் எதிரியாக சேர்த்து, அவரது படிப்பை கெடுக்கும் வகையில் வழக்கு நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்பதால் தான், எனக்கான விபத்து பதிவேட்டு ஆவணத்தில் என்னை தாக்கி காயப்படுத்தியவர்கள் உறவினர்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னிடம் வாய்மொழியாகதான் விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம். நான் மயக்கநிலையில் இருந்ததால், நான் அளித்த புகார் வாக்குமூலத்தினை படித்து பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வேறு ஒரு புகார் கொடுக்கப்பட்டு, அது மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.05.13 18:20:43 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.244./2022 –** P.W.2.

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. மணிபிரகாஷ் | Father's Name. மணவாளன் |
| Village : அந்தணப்பேட்டை | Age: 26 |
| Date :13.05.2026 | தொழில் : ஸ்வீட் கடை |

நம்பர்: 7010724471

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th day of May 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th day of May 2026.**

Signature of Interpreter

**( எதிரிகள் ஆஜர் )**

**கூடுதலாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்ட 7 மற்றும் 8 ஆகிய எதிரிகளை பொறுத்து, அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் அந்தணப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். அசா–1 எனது அப்பா. நானும், எனது அப்பாவும் நாகப்பட்டினம் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் ஸ்வீட் கடை வைத்து நடத்தி வருகிறோம். எதிரிகள் 7, 8 ஆகியோர்களை தெரியும். எனது அப்பாவிற்கும், அத்தைகளுக்கும் கடை

சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்தது. கடந்த 19.10.2021 ஆம் தேதி இரவு 10.30 மணி இருக்கும், அப்போது, கலைவாணி , பஞ்சவர்ணம், ராணி ஆகியோரின் தூண்டுதலுன் பேரில் சுதந்திரராஜா, விஜயகுமார், சதீஷ், சந்தோஷ் , தனுஷ் ஆகியோர் பஸ் ஸ்டான்டில் உள்ள எங்கள் கடைக்கு வந்தார்கள். நானும், எனது அப்பாவும் கடையில் இருந்தோம். சதீஷ்வும், தனுஷ்வும் என்னை பிடித்து கொண்டார்கள், எனது அப்பாவை சந்தோஷ்குமார் பிடித்து கொண்டார். எனது அப்பாவை விஜயகுமார் என்பவர் பட்டாகத்தியால் தலையில் வெட்டினார். தோள்பட்டையிலும், இடது கையிலும் வெட்டினார். என்னை சுதந்திரராஜா என்பவர் பட்டா கத்தியால் எனது தலையில் ஒரு வெட்டும், வலது கையில் மூன்று வெட்டும் வெட்டினார், கழுத்து அருகே வெட்டினார். வெட்டும் போது, என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி வெட்டினார். காயம்பட்ட எனது அப்பாவும், நானும் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அதன் பிறகு நானும் ,எனது அப்பாவும் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். அங்கிருந்து வினோதகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் புதிதாக சேர்க்கப்பட்ட 7 மற்றும் 8 ஆம் எதிரிகளுக்கு மட்டுமின்றி 1 முதல் 6 வரையிலான எதிரிகளுக்கும் தான்தான் ஆஜராகுவதாகவும், ஏற்கனவே இந்த சாட்சியை அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்த போது, 1 முதல் 6 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்றும், தற்போது அவர்களுக்காகவும் சேர்த்து குவிமுச 311 ன் படி குறுக்கு விசாரணை செய்யும் படி மனுதாக்கல் செய்து வேண்டினார்,. மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் 1 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

போலிசார் என்னையும் அசா–1 ஆன எனது அப்பாவையும் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் வைத்து, சம்பவம் நடந்த அன்றே விசாரணை செய்தார்களா என்றால், விசாரணை செய்தார்கள் என சாட்சியம் அளித்துவிட்டு, எனது அப்பாவை மட்டும் தான் விசாரணை செய்தார்கள் என்றும், நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்த பொழுது, நான் மயக்கமாக இருந்ததால், என்னை தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையில் வைத்து தான் விசாரணை செய்தாரகள் என சாட்சி சாட்சியம் அளிக்கின்றார். என்னை போலிசார் விசாரணை செய்து பதிவு செய்த குவிமுச பிரிவு 161(3) படியான வாக்குமூலத்தில், நான் முதல் விசாரணையில் சொன்ன இரண்டு எதிரிகள் என்னை பிடித்துக் கொண்டார்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொல்லியுள்ளேன். 6ஆம் எதிரி சதிஷ் நீங்கலாக இதர எதிரிகள் அனைவரும் எனது நெருங்கிய உறவினர்கள் தான் என்று சொன்னால் சரிதான். 7,8 ஆகிய எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக முதன்முதலாக இந்நீதிமன்றத்தில் தான் சாட்சியமாக அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் விசாரணையில் சொன்னேன். போலிசார் எப்போது, எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சாட்சி முதலில் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்ததாக சொல்லிவிட்டு, பின்னிட்டு தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையில் வைத்து 21 ஆம் தேதி விசாரித்ததாக நினைக்கின்றேன், தேதி சரியாக நியாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கின்றார்.

போலிசார் விசாணையிலும் நான்கு நபர்கள் மட்டுமே சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ சமயத்தில், சம்பவ இடத்திற்கு வராத 3 முதல் 5 வரையிலான எதிரிகளின் தூண்டுதலின்

அடிப்படையில்தான் இதர எதிரிகள் சம்பவத்தன்று, சம்பவ இடத்திற்கு வந்து பிரச்சினையில் ஈடுபட்டனர் என்று நான் எதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இதற்கு முன்னால் அவர்கள் தான் கடையில் வந்து பிரச்சினை செய்தார்கள். அதனால் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

நான் சாட்சியம் அளித்தது போல, இந்த சம்பவத்திற்கு முன்பாக 3 முதல் 5 வரையிலான எதிரிகள் எங்கள் கடையில் வந்து பிரச்சினையில் ஈடுபட்டதாக ஏதாவது அந்த நபர்களுக்கு எதிராக குற்ற வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளனவா என்றால் , தனிபுகாரின் அடிப்படையில் தொடுக்கப்பட்ட ஆண்டு பட்டினை வழக்கு எண் 820 என்ற வழக்கு, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. என் மீதும், அசா–1 ஆன எனது அப்பா மீதும் இந்த சம்பவத்திற்கு முன்பாகவே நாங்கள் 3 வது எதிரி பஞ்சவர்ணம், 5வது எதிரி ராணி ஆகியோர்களை அடித்து காயப்படுத்தியதாக சொல்லி இரண்டு குற்ற வழக்குகள் நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

இந்த சம்பவம் சம்பந்தமாக நாகப்பட்டினம் அரசு மருத்துமனையில் நான் சிகிச்சையில் சேர்ந்த போது, எனக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் எனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொன்னதை மருத்துவர் பதிவு செய்துக்கொண்டு , வழங்கிய எனக்கான விபத்துப்பதிவேட்டு ஆவணம் தான் தற்போது காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த விபத்து பதிவேடு ஆவணத்தில் கடந்த 19.10.2021 ஆம் தேதியில் இரவு 10.30 மணியளவில் என்னை 6 தெரிந்த நபர்கள் அருவாள் , பட்டா கத்தியை வைத்து தாக்கி காயம்படுத்தியதாக எனக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் கூறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று

சொன்னால் சரிதான். என்னை தாக்கிய நபர்கள் எனது உறவினர்கள் என்ற விவரத்தையும், அவரது பெயர் விவரத்தினையும் எனக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் நான் கூறவில்லை என்று சொன்னால் எனது சொந்தகாரர்கள் தான் என்னை வெட்டியதாக சொல்லியுள்ளேன். எனது சொந்தக்காரர்கள்தான் என்னை வெட்டியதாக எனக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் கூறினேன் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை வெட்டும் போது, 1 ஆம் எதிரி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி என்னை வெட்டினார் என்று நான் எனது முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

சம்பவ இடத்திற்கு அருகாமலேயே புறக்காவல் மையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த உடன் அந்த புறக்காவல் மையத்திலிருந்து போலிசார் சம்பவ இடம் வந்து விட்டார்களா என்றால் இல்லை. நான் தான் அங்கு போய் பார்த்தேன். அப்போது போலிசார் அங்கு இல்லை. சம்பவம் நடந்து , எவ்வளவு நேரத்தில் போலிசார் வந்தார்கள் என்றால், சம்பவ நடந்த அன்று நாங்கள் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த பிறகுதான் மேற்படி மருத்துவமனைக்கு வந்தார்கள். சம்பவ இடத்திற்கு போலிசார் எப்போது வந்தார்கள் என்றால் , நான் மருத்துவமனையில் இருந்ததால் எப்போது வந்தார்கள் என்று தெரியாது. எதிரிகளால் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் பட்டா கத்திகள் இரண்டையும் எங்கள் கடையின் பக்கத்து கடைக்காரரான முத்துக்குமரன் என்பவர் தான் போலிசாரிடம் ஆஜர் செய்தார்.

சம்பவம் நடந்த உடனேயே 1ஆம் எதிரி சுதந்திராஜாவையும், 2வது எதிரி விஜயகுமாரையும் சம்பவ இடத்திலிருந்து போலிசார் காவல் நிலையம் அழைத்து சென்றார்களா என்றால் இல்லை, மறுநாள்தான் அவர்கள் காவல்நிலையத்தில்

சரண்டர் ஆகியுள்ளார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட அன்று, பேருந்து நிலையத்தில் தனியாக நின்றிருந்த பெண்ணிடம் நான் காமகுரோதமான செயல்களில் ஈடுபட்டேன் என்றும், அதனால் பக்கத்து கடைக்காரர்கள்தான் என்னையும், எனது அப்பாவையும் அடித்து சொற்பகாயத்தினை ஏற்படுத்தினார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த காயங்களை வைத்துக் கொண்டு, கடை பிரச்சினையால் எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே உள்ள முன்விரோதத்தால் எதிரிகள்தான் எங்களை தாக்கி காயப்படுத்தியது போல, தவறான புகாரினை போலிசாரிடம் கொடுத்தோம் என்றும், அதற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சாட்சியம் அளித்தது போல, இவ்வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்றும், எதிரிக்கும் எங்களுக்கு ஏற்பட்ட காயச்சம்பவத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் மருத்துவமனையிலிருந்து முறையாக விடுவிக்கப்படாமல், தலைமறைவாகிவிட்டார் என்று சொன்னால், சரியல்ல. அவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்துவிடுவார் என்ற பயத்தில் அவர் தலைமறைவாகிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.05.13 18:20:55 +0530